நீதித்துறை நடுவர் எண்.3 நீதிமன்றம், திருப்பத்தூர் வேலூர் மாவட்டம

**சி.சி.எண்.155 /2020**

2022ம்ஆண்டு மார்ச் திங்கள் 25ம் நாள் வெள்ளிகிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா.4வது நபரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. ஆனந்தன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது

| | | | | |
|---|---|---|---|---|
| **பெயர்** | : **சோமநாதன்** | **வயது** | : | **43** |
| **த/பெ.** | : **செல்வம்** | **தொழில்** | : | **சாப்பாடு வியாபாரம்** |
| **ஊர்** | : **பால்னாங்குப்பம்** | **சமயம்** | : | |
| **வட்டம்** | : **திருப்பத்தூர்** | **சாதி** | : | |
| **மாவட்டம்** | : **திருப்பத்தூர்** | | | |

**முதல் விசாரணை:-**

நான் பால்னாங்குப்பம் கிராமத்தில் வசிக்கிறேன். நான் ஜோலார்பேட்டை ரயில் நிலையத்தில் சாப்பாடு வியாபாரம் செய்கிறேன்.சுமார் 1 வருடத்திற்கு முன்பு தேதி மாதம் நினைவில்லை. காலை நேரம் நான் ரயில் நிலையத்தில் வியாபாரம் செய்துக்கொண்டிருந்தேன்.அப்போது போலீசார் என்னை அழைத்து கையொப்பம் வாங்கினார்கள். எதற்காக கையொப்பம் போட்டேன் என தெரியாது. ஆஜர் எதிரியை தெரியாது.ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள முதலாவதாக உள்ள கையெழுத்து என்னுடையதுதான், அந்த கையெழுத்து மட்டும் அ.த.சா.ஆ. 3 ஆகும். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சியை பிறழ் சாட்சியாக விசாரிக்க அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கியதன் பேரில் அ.த.கு.வி:-)**

கடந்த 13.11.2019ம்தேதி அதிகாலை ஜோலார்பேட்டை ரயில் நிலைய நடைமேடை எண்.2,3ல் ஆஜர் எதிரியை போலீசார் பிடித்து விசாரித்த போது நான் பார்த்தேன் என்றால் சரிதான்.அவ்வாறு போலீசார் விசாரித்த போது ஆஜர் எதிரி தங்க நகைகளையும், செல்போனையும் திருடியதாக ஒப்புக்கொண்டு வாக்குமூலம் அளித்தார் என்றால் எனக்கு அதுப்பற்றி தெரியாது. போலீசார் விசாரித்ததை மட்டும் தான் நான் பார்த்தேன்.போலீசார் என் முன்னிலையில் ஆஜர் எதிரியிடம் ஒப்புதல்வாக்குமூலம் பதிவு செய்து அதற்கு சாட்சியாக கையொப்பம் பெற்றார்கள் என்றால் போலீசார் கையெழுத்து வாங்கினார்கள் எதற்காக வாங்கினார்கள் என தெரியாது. எதிரி என் முன்னிலையில் 8

ிகிராம் தங்ககட்டி ஒன்றை எடுத்து காவல் நிலையத்தில் வைத்து ஆஜர்படுத்தினார் என்றும், அதனை போலீசார் படிவம் 91-ன் மூலம் பெற்றுக்கொண்டார்கள் என்றால் எனக்கு அதைப்பற்றி தெரியாது. படிவம 91-ன் உள்ள முதலாவதாக உள்ள கையொப்பம் என்னுடையதுதான். எதற்காக அந்த கையெழுத்தை போட்டேன் என தெரியாது.

எ.த.கு.வி:-

போலீசார் விசாரிததை பார்த்தேன் என்றால் சரிதான்.எந்த வைத்து விசாரித்தார்கள் என்றால் 3வது பிளாட்பாரத்தில் பார்த்தேன். 3வது பிளாட்பாரத்தில் எந்த போகி எண் பக்கத்தில் விசாரித்தார்கள் என்றால் ஆவின் பாலகம் பக்கத்தில் விசாரித்துக்கொண்டிருந்தார்கள். எப்போது பார்த்தேன் என்றால் நானும், பொன்னுரங்கம் என்பவரும் ஆவின் பாலகத்தில் காபி குடித்து கொண்டிருந்த போது பார்த்தேன். யாரை விசாரித்துக்கொண்டிருந்தார்கள் என்பது பற்றி தெரியாது என்றால் சரிதான். அதன் பிறகு தான் காவல் நிலையத்தில் போலீசார் கேட்டுக்கொண்டதன் பேரில் கையெழுத்து போட்டேன் என்றால் சரிதான். எத்தனை கையெழுத்து போட்டேன் என்றால் 3 கையெழுத்து போட்டேன். நான் கையெழுத்து போட்டதாளில் என்ன எழுதியிருந்தது விபரம் தெரியாது என்றால் சரிதான். நான் வியாபாரம் செய்யும் நோக்கத்தில் இருந்ததால் கவனிக்கவில்லை.

ம.வி:-

இல்லை

நீதித்துறை நடுவர் எண்.3 நீதிமன்றம், திருப்பத்தூர் வேலூர் மாவட்டம

<u>சி.சி.எண்.155 /2020</u>

2022ம்ஆண்டு மார்ச் திங்கள் 25ம் நாள் வெள்ளிகிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா.5வது நபரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. ஆனந்தன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது

| | | | | |
|---|---|---|---|---|
| **பெயர்** | **:** | **பொன்னுரங்கம்** | **வயது** | **: 52** |
| **த/பெ.** | **:** | **கரியப்பன்** | **தொழில்** | **: சாப்பாடு வியாபாரம்** |
| **ஊர்** | **:** | **ஏலகிரி** | **சமயம்** | **:** |
| **வட்டம்** | **:** | **திருப்பத்தூர்** | **சாதி** | **:** |
| **மாவட்டம்** | **:** | **திருப்பத்தூர்** | | |

**முதல் விசாரணை:-**

நான் ஏலகிரி கிராமத்தில் வசிக்கிறேன். நான் ஜோலார்பேட்டை ரயில் நிலையத்தில் சாப்பாடு வியாபாரம் செய்கிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது.ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள இரண்டாவதாக உள்ள கையெழுத்து என்னுடையதுதான். படிவம 91-ன் உள்ள இரண்டாவதாக உள்ள கையொப்பம் என்னுடையதுதான்.சுமார் 2 ஆண்டுகளுக்கு முன்பு தேதி மாதம் நினைவில்லை. காலை 07.30 மணிக்கு நான் ரயில் நிலையத்தில் வியாபாரம் செய்துக்கொண்டிருந்தேன்.அப்போது போலீசார் என்னை அழைத்து கையொப்பம் வாங்கினார்கள். எதற்காக கையொப்பம் போட்டேன் என தெரியாது.ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள இரண்டாவதாக உள்ள கையெழுத்து மட்டும் அ.த.சா.ஆ. 4 ஆகும். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சியை பிறழ் சாட்சியாக விசாரிக்க அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கியதன் பேரில் அ.த.கு.வி:-)**

கடந்த 13.11.2019ம்தேதி அதிகாலை ஜோலார்பேட்டை ரயில் நிலைய நடைமேடை எண்.2,3ல் ஆஜர் எதிரியை போலீசார் பிடித்து விசாரித்த போது நான் பார்த்தேன் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. அவ்வாறு போலீசார் விசாரித்த போது ஆஜர் எதிரி தங்க நகைகளையும், செல்போனையும் திருடியதாக ஒப்புக்கொண்டு வாக்குமூலம் அளித்தார் என்றால் எனக்கு அதுப்பற்றி தெரியாது.போலீசார் என் முன்னிலையில் ஆஜர் எதிரியிடம் ஒப்புதல்வாக்குமூலம் பதிவு செய்து அதற்கு சாட்சியாக

கையொப்பம் பெற்றார்கள் என்றால் போலீசார் கையெழுத்து வாங்கினார்கள் எதற்காக வாங்கினார்கள் என தெரியாது. எதிரி என் முன்னிலையில் 8 கிராம் தங்ககட்டி ஒன்றை எடுத்து காவல் நிலையத்தில் வைத்து ஆஜர்படுத்தினார் என்றும், அதனை போலீசார் படிவம் 91-ன் மூலம் பெற்றுக்கொண்டார்கள் என்றால் எனக்கு அதைப்பற்றி தெரியாது. படிவம 91-ன் உள்ள முதலாவதாக உள்ள கையொப்பம் என்னுடையதுதான். எதற்காக அந்த கையெழுத்தை போட்டேன் என தெரியாது.

எ.த.கு.வி:-

இல்லை